

# முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி

## ரழியல்லாஹு அன்ஹு

முஹம்மத் அப்துல் ரஹ்மான்

# முஹிய்யத்தீன் அப்துல்  காதிர் ஜீலானி

## ரழியல்லாஹு அன்ஹு

ஆசிரியர்:

**முஹம்மத் அப்துல் ரஹ்மான்**

வெளியீடு:

**மெயில் ஒப் இஸ்லாம்**

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | முஹிய்யத்தீன் அப்துல் காதிர் ஜீலானி<br>ரழியல்லாஹு அன்ஹு |
| ஆசிரியர் | : | முஹம்மத் அப்துல் ரஹ்மான்<br>கொழும்பு, இலங்கை |
| வெளியீடு | : | மெயில் ஒப் இஸ்லாம்<br>www.mailofislam.com |
| © நூல் உரிமை | : | மெயில் ஒப் இஸ்லாம் (வெளியீட்டாளர்) |
| முதற் பதிப்பு | : | 2018 |
| பக்கங்கள் | : | 20 |
| விலை | : | ரூபா 100.00 |

**சமர்ப்பணம்**

இந்நூலை எனது அருமை தந்தையார் மற்றும் அன்பு தாயார்

ஆகியோருக்கு தாழ்மையுடன் ஹத்யா செய்கிறேன்

# ஆசிரியர் உரை

அஸ்ஸலாமு அலைக்கும்,

மாபெரும் தவசீலர், மெய்நிலை கண்ட ஞானி, சங்கைக்குரிய குதுபுர் ரப்பானி, சுல்தானுல் அவ்லியா முஹிய்யதீன் அப்துல் காதிர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உலக முஸ்லிம்கள் அனைவராலும் போற்றிக் கொண்டாடப்படும் ஒரு உன்னத மகான் ஆவார்கள். முஸ்லிம் அல்லாதவர்கள் கூட மாபெரும் தவசீலர் முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மீது மதிப்பும், மரியாதையும், கண்ணியமும் வைத்து அவர்களை போற்றுகிறார்கள். இது அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய மாபெரும் அருட்கொடை எனலாம்.

"காதிரியா தரீக்கா" என்னும் ஆத்மீக பள்ளியை உருவாக்கிய செம்மல் இவர்கள். இவர்கள் இந்த ஆத்மீக பள்ளி மூலம் எத்தனையோ நேசர்களை உருவாக்கி, மனிதர்களை புனிதர்களாக ஆக்கிய மாபெரும் மகான் ஆவார்கள். தங்களது சிறப்பான சொற்பொழிவுகளால் பல லட்சக்கணக்கான மக்களை புனித இஸ்லாத்திற்குள் கொண்டு வந்த இப்படிபட்ட உத்தமரின் வாழ்க்கை வரலாற்றை ஒவ்வொரு முஸ்லிமும் அறிவது மிக முக்கியமானது. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை வாசிப்பதன் மூலம் அவர்களின் பாதச்சுவட்டை பின்பற்றி நாமும் நிச்சயம் வெற்றி அடையலாம் என்ற நல்லெண்ணத்தோடு இந்த குறுநூலை எழுதினேன். எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த சிறு முயற்சியை ஏற்றுக்கொள்வானாக...

**முஹம்மத் அப்துல் ரஹ்மான்**

ஆசிரியர்

**18 - 12 - 2018**

# வெளியீட்டாளர் உரை

அஸ்ஸலாமு அலைக்கும்,

மெயில் ஒப் இஸ்லாம் என்பது ஓர் அரசியல் சார்பற்ற இலாப நோக்கமற்ற உலக இஸ்லாமிய பிரச்சார (தஃவா) அமைப்பாகும்.

மெயில் ஒப் இஸ்லாம் பதிப்பாளர்களாகிய நாங்கள் பல்வேறு மொழிகளிலும் இஸ்லாமிய நூல்களை வெளியிட்டு வருகிறோம். அந்த வரிசையில் முஹம்மத் அப்துல் ரஹ்மானால் எழுதப்பட்ட "முஹிய்யதீன் அப்துல் காதிர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு)" என்ற குறுநூலை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழ் பிரிவு

**மெயில் ஒப் இஸ்லாம்**

**www.mailofislam.com**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பிறப்பு | 7 |
| பிறப்பின் சிறப்பு | 7 |
| பிறப்பின்போது நடந்த அற்புதங்கள் | 8 |
| கல்வி | 8 |
| ஷைக்கின் சகவாசம் | 10 |
| ஹஜ் மற்றும் ஸியாரத் | 10 |
| துறவு | 11 |
| முஹிய்யதீன் என்ற சிறப்பு பெயர் கிடைத்தமை | 12 |
| காதிரியா தரீக்காவின் உருவாக்கம் | 12 |
| அல்லாஹ்வின் கட்டளையை வெளிப்படுத்தல் | 14 |
| குடும்ப வாழ்க்கை | 14 |
| வியாபாரம் | 15 |
| உருவ அமைப்பு | 16 |
| குண நலன்கள் | 16 |
| மறைவு | 17 |
| மவ்லித் - உரூஸ் - கந்தூரி | 17 |
| ஷேய்க் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் உபதேசங்கள் | 18 |


ஜீலான் - ஈரான் (2018)

## பிறப்பு

ஆத்மீக கடல், ஞானதீபம், மெய்நிலை கண்ட ஞானி, காதிரியா தரீக்காவின் ஸ்தாபகர், மாபெரும் தவசீலர், குத்புல் அக்தாப், கௌதுல் அஃழம், முஹிய்யத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், ஹிஜ்ரி 470 ரமழான் மாதம் பிறை 1 திங்கட்கிழமை இரவு ஸஹர் நேரத்தில் (கி. பி. 1078 - மார்ச் 19 ஆம் திகதி) ஈரான் நாட்டின் ஜீலான் என்னும் நகரை ஒட்டிய நீப் என்னும் கிராமத்தில் பிறந்தார்கள்.

## பிறப்பின் சிறப்பு

முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் 11வது தலைமுறையில் பிறந்த பேரப்பிள்ளையாவார்கள். இவர்களின் தந்தையாரின் பெயர் ஸைய்யது அபூஸாலிஹ் இப்னு மூஸா (ரழியல்லாஹு அன்ஹு). தாயாரின் பெயர் உம்முல் கைர் என்னும் அமத்துல் ஜப்பார் என்பதாகும். இவர்களின் தந்தையார் ஒரு ஸூஃபி மகானாகவும், தாயார் சிறந்த தக்வாவுடைவர்களாகவும் விளங்கினார்கள். இவர்கள் பிறக்கும்போது இவர்களின் தாயாருக்கு வயது அறுபது.

முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தந்தை வழியில் ஹஸனியாகவும் தாய்வழியில் ஹுஸைனியாகவும் விளங்குகிறார்கள். அதாவது ஹஸனி என்றால் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் திருப்பேரர் செய்யதுனா ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் வம்சாவழியிலும் ஹுஸைனி என்றால் மற்றுமொரு திருப்பேரர் செய்யதுனா ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் வம்சாவழியிலும் பிறந்தவர்கள் என்பதாகும்.

| | |
|---|---|
| ♦ இயற் பெயர் : | அப்துல் காதிர் |
| ♦ சிறப்பு பெயர்கள் : | முஹிய்யத்தீன்<br>கௌதுல் அஃழம்<br>குத்புல் அக்தாப் |
| ♦ பிறந்த நாள் : | ஹிஜ்ரி 470 - ரமழான் மாதம்<br>பிறை 1 - திங்கட்கிழமை<br>கி. பி. 1078 மார்ச் 19 |
| ♦ பிறந்த இடம் : | ஜீலான் - ஈரான் |
| ♦ மறைந்த நாள் : | ஹிஜ்ரி 561 - ரபியுல் ஆகிர்<br>பிறை 11 - திங்கட்கிழமை<br>கி.பி. 1166 பிப்ரவரி 14 |
| ♦ மறைந்த இடம் : | பக்தாத் - ஈராக் |
| ♦ கொள்கை : | சுன்னத் வல் ஜமாஅத் |
| ♦ மத்ஹப் : | ஹன்பலி |
| ♦ தரீக்கா : | காதிரியா (ஸ்தாபகர்) |
| ♦ நூல்கள்: | 1. குன்யத்துத் தாலிபீன்<br>2. புத்தூஹுல் கைப்<br>3. பத்ஹுர் ரப்பானீ<br>4. கஸீதா கௌதிய்யா<br>5 பஷாயிருல் கைராத்<br>6. அல்பவாயிது வல் ஹிந்து<br>7. அழ்ழயூலாதுர் ரப்பானிய்யா<br>8. மவாஹிபு ரஹ்மானியா |




## பிறப்பின்போது நடந்த அற்புதங்கள்

முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பிறந்தபோது பல்வேறு அற்புதங்கள் நிகழ்ந்தேறின. இவர்கள் பிறந்த தினத்தன்று அவர்களின் தந்தையின் கனவில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் தோன்றி, “அபூசாலிஹே! உமக்கு அல்லாஹுத்தஆலா அருந்தவப் புதல்வரை அளித்திருக்கிறான். அவர் எனக்கும் அல்லாஹ்வுக்கும் மிகப் பிரியமானவர். வலிகள், குதுபுகள் ஆகியோரிடையே அந்தஸ்து மிக்கவர்” என அறிவித்தார்கள் .

இவர்கள் கருவிலிருக்கும்போது இவரது அன்னையின் கனவில் ஹழ்ரத் கிலுறு (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தோன்றி “உமது கர்ப்ப அறையில் இருப்பவர் எல்லா வலிமார்களுக்கும் தலைவரான முஹ்யித்தீன் என்பவராவார்” என்று நன்மாராயம் கூறிச் சென்றனர்.

முஹிய்யத்தீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பிறந்த இரவில் ஜீலான் நகரில் மட்டும் 1001 குழந்தைகள் பிறந்தன. அதில் பெண் குழந்தைகள் ஒன்று கூட இல்லை. அவை அத்தனையும் பிற்காலத்தில் வலிமார்கலாகவும், சான்றோர்களாகவும் ஆயின.

ரமழான் மாதம் முதல் பிறை அன்று பிறந்த முஹிய்யத்தீன் அப்துல் காதர் ஜீலானி அவர்கள் பகலிலே பால் அருந்தாது இரவிலே மட்டும் பால் அருந்தியதை கண்ட அவர்களின் அன்னையவர்கள் தம் புதல்வர் அல்லாஹ்வின் பேரருள் பெற்றவர் என்பதை உணர்ந்து கொண்டனர். அதே போல, அடுத்த வருடம் கார்முகில் காரணமாக மக்கள் பிறை காணாது தவித்தபோது, ரமலான் பிறை ஒன்று அன்று இவர்கள் பால் அருந்தாதினால் அன்றுதான் ரமலான் பிறை ஒன்று என்று கணித்தார்கள். பின்னர் அதுபோலவே பக்கத்துக்கு ஊரில் பிறை தென்பட்டது என்ற செய்தி வந்ததும் மக்கள் அனைவரும் வியப்புற்றார்கள்.

## கல்வி

மாபெரும் தவசீலர் முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் பச்சிளம் பருவத்திலேயே அவர்களின் தந்தையார் இறையடி எய்தினார்கள். தாயின் அரவணைப்பில் வளர்ந்த குதுபு நாயகம் அவர்கள், குழந்தை பருவத்திலேயே கல்வியில் சிறப்புற்று விளங்கினார்கள். ஆரம்பத்தில் கல்வியை தம் சொந்த ஊரான ஜீலான் நகரிலேயே கற்றார்கள். ஆறு வயதில் பள்ளிக்கு அனுப்பப்பட்ட அவர்கள் ஏனைய மாணவர்கள் மனனஞ் செய்ய ஒரு வாரம் பிடிக்கும் ஒரு பாடத்தை இவர்கள் ஒரே நாளில் மனனஞ் செய்து விடுவார்கள். சிறுவயதிலேயே அவர்கள் திருக்குர்ஆனை மனப்பாடம் செய்துவிட்டார்கள்.

பதினெட்டு வயதை அடைந்த பொழுது உயர்கல்வி கற்பதற்காக பக்தாது நகர் செல்ல முடிவு செய்தார்கள். அதற்காக தம் அன்னையிடம் அனுமதி கோரினார்கள். முதலில் தம் மகனை விட்டு பிரிய மனமின்றி அழுதார்கள். ஆனாலும் பிறகு அவரின் இந்த முடிவைக் கேட்டு மனம் மகிழ்ந்து, உடனே அனுமதி அளித்தார்கள் அன்னாரின் தாயார் அவர்கள்.

தந்தையார் அபூசாலிஹ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தம் குடும்பத்தினருக்காக விட்டுச் சென்ற 80 பொற்காசுகளில் 40 பொற்காசுகளை நாயகம் அவர்களின் சட்டைப் பையில் வைத்து தைத்து கல்வி கற்க அனுப்பி வைத்தார்கள் தாயார் அவர்கள்.

அச்சமயம் தம் மைந்தரை நோக்கி, எப்போதும் உண்மையே பேச வேண்டும் என்று உபதேசித்து அனுப்பி வைத்தார்கள். பக்தாதிற்காக பயணமாகிச் செல்லும் வியாபாரிகளுடன் சேர்ந்து கொண்டார்கள் நாயகமவர்கள். இவ்வியாபாரிகள் ஹமதான் எனும் நகரைக் கடந்து செல்லும் போது வழிப்பறித் திருடர்கள் அறுபது பேர் இவர்களை வளைத்துக் கொண்டார்கள். நாயகமவர்களை கொள்ளையர்கள் சோதித்து கேட்டபோது, தம்மிடம் நாற்பது பொற்காசுகள் இருப்பதாக உண்மையை சொன்னார்கள். ஆனால் திருடர்கள் நம்பவில்லை. இறுதியாக திருடர்கள் தலைவரிடம் கொண்டு சென்றனர். அங்கும் அவர்கள் உண்மையே பேசினார்கள். நாயகமவர்களை சோதித்துப் பார்த்த போது, அவர்கள் சொன்னது உண்மை என்று தெரியவந்தது. வியப்புற்ற கள்வர்கள், காரணம் கேட்டபோது, தாயாரிடம் கொடுத்த வாக்குறுதி படி நான் உண்மையையே பேசினேன் என்றுரைத்தார்கள். இதைக் கேட்டு கள்வர்கள் திருந்தி, இனிமேல் பாவச் செயல்களில் ஈடுபட போவதில்லை என்று நாயகமவர்களிடம் சத்தியம் செய்து கொடுத்தனர். இறைவனிடமும் பாவமன்னிப்புத் தேடினர். பிற்காலத்தில் இவர்கள் அனைவரும் வலிமார்களாக திகழ்ந்தனர் என சரித்திரம் கூறுகிறது.

**ஆசிரியர்கள்**

- ♦ ஃபிக்ஹு : அபுல் வஃபா அலி பின் அகீல்
  காஸி அபூ ஸஈத் முபாரக் முகர்ரமி
- ♦ ஹதீது : அபூ காலிப் அஹ்மது
  அபுல் காஸிம் அலி
- ♦ இலக்கியம் : அபூ ஸகரிய்யா யஹ்யா தப்ரேஸி
- ♦ சூபிசம் : அபுல் கைர் ஹம்மாத் அல் தப்பாஸ்
- ♦ இதர ஆசிரியர்கள்:
  அபூ அல் ஹசன் அபூ யாலா
  அபூ அல் கத்தாப் ஹன்பலி
  முஹம்மத் இப்ன் ஹுஸ்னைன்
  அபூபக்கர் இப்ன் முஸப்பர்
  இன்னும் பலர்

தனது உயர்தர கல்வியை பக்தாதுக்கு சென்று அங்கு பிரபலமாக இருந்த மாபெரும் அறிஞர்களிடம் கற்றார்கள். தப்ஸீரிலும், ஹதீஸிலும், ஃபிக்ஹு பாடங்களிலும் சிறந்து விளங்கிய ஒவ்வொரு பாடத்துக்கும் பிரபலமாக இருந்த மார்க்க அறிஞர்களிடம் சென்று கல்வி கற்றார்கள். முதலில் மார்க்க சட்ட (ஃபிக்ஹு) கல்வியை தாஜுல் ஆரிபீன் (இறைநேசர்களின் கிரீடம்) என்று புகழ்பெற்ற அபுல் வஃபா அலி பின் அகீல் அவர்களிடமும் காஸி அபூ ஸஈத் முபாரக் முகர்ரமி அவர்களிடமும் கற்றார்கள். பின்னர் ஹதீது கலையை அபூ காலிப் அஹ்மது மற்றும் அபுல் காஸிம் அலி ஆகியோரிடம் கற்று தேர்ந்தார்கள். அரபு இலக்கியத்தை அபூ ஸகரிய்யா யஹ்யா தப்ரேஸி அவர்களிம் கற்றார்கள்.

பள்ளியில் பயிலும்போது அவர்கள் ஒரு நாளை ஏழு பங்குகளாக பிரித்து அவற்றில் மூன்று பங்குகளை கல்விக்கும் மூன்று பங்குகளை வணக்கத்திற்கும் ஒரு பங்கை உறக்கத்திற்கும் செலவிட்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக தம் தாய் கொடுத்து அனுப்பிய 40 பொற்காசுகளும் கரைய தொடங்கின. வறுமையிலும் பசியிலும் கஷ்டத்தோடு படித்தார்கள். பக்தாது நகரில் ஹலாலான உணவுக்காக தேடி அலைந்தார்கள். அது கிடைக்கும்வரை பசியாக இருந்தார்கள். மாணவராக இருந்த காலகட்டத்தில் பாடங்களை மனனம் செய்வதற்காக ஊருக்கு வெளியிலுள்ள காட்டிற்கு சென்று விடுவார்கள். அங்கு கிடைக்கும் கனிகளையும், கிழங்குகளையும், கீரைகளையும் புசித்தே பசியை தீர்த்துக் கொண்டார்கள்.

ஏழு ஆண்டு காலம் விடா முயற்சியுடன் கல்வி பயின்று ஹிஜ்ரி 496 துல்ஹஜ் மாதம் தமது 25 ஆம் வயதில் பக்தாத் சர்வ கலாசாலையின் உயர்தர பரீட்சையில் தேர்ச்சி பெற்றார்கள்.



ஷேய்க் அப்துல் காதிர் பள்ளிவாசல் - பக்தாத், ஈராக் - 2015

## ஷைக்கின் சகவாசம்

எல்லா விதமான கல்வியையும் கற்ற பின் தனக்கு ஒரு ஆத்மீக வழிக்காட்டி தேவை என்பதையும் அதுவே தன்னை அல்லாஹ்விடம் நெருங்கச்செய்யும் வழி என்றும் உணர்ந்தார்கள். எனவே தனக்கு ஆத்மீக வழிக்காட்ட ஒரு ஞானகுருவை தந்தருளுமாறு அல்லாஹ்விடம் இறைஞ்சினார்கள். அப்பொழுது இறைவன் அவர்களுக்கு ஷைகு அபுல் கைர் ஹம்மாத் அல் தப்பாஸ் என்னும் மார்க்க பெரியாரை தேர்ந்தெடுத்து கொடுத்தான். அந்த ஷைக் அவர்கள் கௌஸுல் அஃலம் முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு பலவகையான ஆத்மீக ஞானங்களை கற்றுக்கொடுத்தார்கள். பல கடுமையான சோதனைகளை செய்தார்கள். எனினும் கௌஸுல் அஃலம் அவர்கள் சகிப்புதன்மையுடனும், திட நம்பிக்கையில் மலையாகவும் விளங்கினார்கள். பின் மூன்று ஆண்டுகளில் 'தஸவ்வுஃப்' என்னும் ஆத்மா ஞானத்தில் தேர்ச்சி பெற்றார்கள். அப்போது ஷைகு ஹம்மாத் அவர்கள், "இந்த அஜமி அப்துல் காதிர் வரும் காலத்தில் மாபெரும் ஞானியாக விளங்குவார். தம் பாதம் சகல வலிமார்களின் தோள் மீது இருப்பதாக சொல்லும்படி அல்லாஹ்வால் உத்தரவிடப்படுவார். இவர் காலத்திலுள்ள எல்லா வலிமார்களும் இவருக்கு தலைப்பணிவார்கள்" என்று கூறினார்கள் .

## ஹஜ் மற்றும் ஸியாரத்

மாபெரும் தவசீலர் முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தனது ஆத்மீக கல்வியை நிறைவு செய்த பின் தம் குருநாதரின் அனுமதியோடு புனித மக்கா சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றினார்கள். ஹஜ்ஜின்போது அல்லாஹ்வின் பேரொளி அவர்களின் உள்ளத்தில் ஊடுருவி பாய்ந்தது. அதனைத் தாங்கி நிற்கும் ஆற்றலை அவர்களுக்கு அளித்து பின்வருமாறு அவர்களுடன் பேசினான் அல்லாஹ்.

வல்லதீன ஜாஹிதூ; பீனா லநஹ்தீனஹும் ஸாபில்னா' (எவர்கள் நமக்காகப் பெரும் துன்பத்தை மேற்கொள்கிறார்களோ, அவர்களுக்கு நாம் நேர்வழியைக் காட்டுவோம்) என்ற, தான் திருமறையில் கூறிய வசனத்தைத் திரும்பக் கூறிய பின், "அப்துல் காதிரே! நீர் 'தௌஹீது' என்னும் ஏகத்துவத்தை பற்றிப் பிடிப்பீராயின், நாம் உமக்குப் பற்பல அற்புதங்களைக் காட்டுவோம். எப்பொழுதும் நீர் தனித்திருந்து, என் நினைவில் தோய்வீராக! உம் நாட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டு எம் நாட்டமே உம் நாட்டம் என்றாகுவீராக! நம் நாட்டமின்றி இவ்வுலகில் யாதொன்றும் நிகழ்வதில்லை என்று திட்டமாக அறிவீராக! உம்மைக் கொண்டு பலர் நம்மை அணுகி, நம் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்" என்று கூறினான் இறைவன். இறைவனின் இச்சொல் இளவலின் இதய கமலத்தை மலரச் செய்தது.

பின்னர் பக்தாது திரும்பிய அவர்கள் மீண்டும் தம் பாட்டனார் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களை ஸியாரத் செய்வதற்காக மீண்டும் புனித மதீனா நகருக்கு நடந்தே வந்து அங்கு 40 நாட்கள் தங்கி இருந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களை மரியாதை செய்வதற்காகவே ஹஜ்ஜுக்கு வந்த பயணத்திலேயே ஸியாரத் செய்யாமல், நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களை சந்திக்க தனி பிரயாணத்தில் வர வேண்டும் என்ற முடிவெடுத்தார்கள்.

## துறவு

"அப்துல் காதிரே! நீர் 'தௌஹீது' என்னும் ஏகத்துவத்தை பற்றிப் பிடிப்பீராயின், நாம் உமக்குப் பற்பல அற்புதங்களைக் காட்டுவோம். எப்பொழுதும் நீர் தனித்திருந்து, என் நினைவில் தோய்வீராக! " என்று ஹஜ்ஜின்போது அல்லாஹ் கூறியதை நினைவில் கொண்டு இபாதத்துகளிலும், தியானத்திலும் ஈடுபடுவதற்காக பக்தாதை விட்டு வெளியேறி ஈராக் காடுகளை நோக்கி சென்றார்கள். கர்க் என்னும் காட்டில் பாழடைந்த கட்டிடத்திலிருந்து கடும் தவம் செய்தார்கள். அது எப்படிப்பட்ட தவம் என்றால் வருடத்தில் ஒரு தடவை அவர்களுக்கு ஒரு மனிதர் கம்பளி உடுப்பு ஒன்றை கொடுப்பார். அதை அணிந்துக்கொண்டே நாட்களை போக்குவார்கள். அவர்கள் செருப்பு அணியாமலேயே கல்லும், முள்ளும் நிறைந்த காடுகளில் நடந்து போவார்கள். ஒரு வருஷம் முழுவதும் அவர்கள் வெறும் காய்கறிகளை உண்டு தண்ணீர் குடிக்காமல் தவம் செய்தார்கள். மறு ஆண்டில் தண்ணீர் மட்டும் குடித்துக்கொண்டு வேறு எதுவும் சாப்பிடாமல் தவம் செய்தார்கள். மூன்றாம் ஆண்டில் தண்ணீரும் அருந்தாமல், எதுவும் சாப்பிடாமல், தூங்காமல் தவத்தில் ஈடுபட்டார்கள்.

அவர்களின் மாண்பினை அறியாது அவ்வழியே செல்லும் மடமாக்கள், அவர்களை ஊமையர் என்று எண்ணிச் செல்வர். கடும் தவத்தினைக் கண்டு, அவர்களின் நஃப்ஸ் (இச்சை) எதிர்ப்பைத் தெரிவித்த பொழுது, அவர்கள் அதனை எதிர்த்து சப்தமிடுவர். அதைக் கண்டு வழிப்போக்கர் சிலர், "சற்று நேரத்திற்கு முன் அமைதியாக இருந்த இவர், திடீரென எவருடனோ சண்டை செய்வது போன்று பெரும் கூச்சலிடுகிறாரே, இவருக்குப் பைத்தியம் முற்றிவிட்டது போல் இருக்கிறது" என்று கூறிச் செல்வர்.

சில பொழுது அவர்கள் உச்சி வேளையில், பாலை மணலில் வெறும் காலுடன் நடந்து செல்வர். மற்றும் சில பொழுது, வெயிலில் குளிப்பது போன்று வெகுநேரம் பொறி பறக்கும் மணலில் வெறும் காலுடன் நின்று கொண்டிருப்பர். வேறு சில பொழுது அவர்கள், முட்புதர்களின் ஒரு பக்கல் புகுந்து மறுபக்கல் வெளி வருவர். அப்பொழுது அவர்களின் உடை கிழிந்து, உடலிலும் முட்கள் கீறி இரத்தம் கசிந்தோடும். அவர்களின் இவ் அவல நிலையைக் கண்டு அவர்கள் மீது இரக்கமுற்றுச் சிலர் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வர்.

ஆண்டுக் கணக்காகப் பட்டினி கிடந்து, அகோர தவம் செய்தததன் காரணமாகச் சில பொழுது, அவர்கள் களைப்பு மேலிட்டுப் பிணம் போல் கிடப்பதைக் கண்டு, அவர்கள் இறந்து விட்டார்களோ என்று சிலர் எண்ணி, அவர்களை நல்லடக்கம் செய்யக் குளிப்பாட்டத் தொடங்கும் பொழுது, அவர்கள் உணர்வு பெற்று எழுவதுமுண்டு.

மேலும் அவர்கள் இஷாவுக்காக செய்யும் வுளுவுடன் சுபஹ் தொழுகையையும் தொழுதார்கள். அதாவது இஷா தொழுகை முடிந்ததும் அவர்கள் ஒற்றைக் காலில் நின்றுக்கொண்டு அருகிலுள்ள ஒரு தூணில் தம் ஒரு கையை தூக்கி வைத்து கட்டிக் கொள்வார்கள். தமக்கு தூக்கம் வராமல் இருக்க இப்படி செய்து விட்டு திருக்குர்ஆன் முழுவதையும் ஓத ஆரம்பிப்பார்கள். அப்பொழுது பொழுதும் புலர்ந்து விடும். உடனே சுபஹ் தொழுகையையும் தொழுவார்கள். ஸுப்ஹானல்லாஹ்! எப்படிப்பட்ட கடும் தவம்! அதனாலேயே அவர்களுக்கு மாபெரும் தவசீலர், மெய் நிலை கண்ட ஞானி என்று பல பட்டங்கள் ஏற்பட்டன. கடமையான தொழுகைகளை முறைப்படி முடித்துக் கொண்டு அவர்கள் நபில் தொழுகையின் மூலமும், குர்ஆனைப் பற்றி சிந்தனையில் இருப்பார்கள். இவ்விதமான கடும் தவத்தில் அவர்கள் இருந்த போது பல நபிமார்களுக்கும், மகான்களுக்கும் வழிக்காட்டிய ஸைய்யதுனா கிழ்று (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை சந்திக்க வாய்ப்பு கிட்டியது. கிழ்று (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் குதுபு நாயகம் அவர்களுக்கு இஸ்முல் அஃலத்தை கற்றுக்கொடுத்து மறைந்தார்கள். தனது அபாரமான கடும் தவத்தாலும், முயற்சியாலும் சிறப்பான ஆத்மீக படித்தரங்களை அடைந்தார்கள் குதுபு நாயகம் அவர்கள்.



ஷேய்க் அப்துல் காதிர் ஜீலானி கந்தூரியில் அவர்களின் புனித பொருள் காட்சிப்படுத்தலின்போது - காஷ்மீர், இந்தியா

## முஹிய்யதீன் என்ற சிறப்பு பெயர் கிடைத்தமை

ஹிஜ்ரி 511 ஆம் ஆண்டில் ஒரு வெள்ளிக்கிழமை. அப்பொழுது முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு 40 வயது நிறைவுற்று, 41 ஆம் வயது தொடங்கி இருந்தது. கௌஸுல் அஃலம் அவர்கள் ஒரு நாள் கால்களில் செருப்பின்றி கானகத்தின் நடுவே பக்தாது நகரை நோக்கி வரும்போது, வழியில் பலஹீனமான வயோதிகர் ஒருவர் அமர்ந்திருந்தார். கௌஸுல் அஃலம் அவர்களை கண்ட அவர், அவர்களுக்கு ஸலாம் சொன்னார். அதற்கு அவர்கள் பதில் ஸலாம் கூறினார்கள். பிறகு அவர், தம்மை தூக்கி நிறுத்தும்படி கேட்டுகொண்டார். கௌஸுல் அஃலம் அவர்கள் அவரை தூக்கி நிறுத்தினார்கள். உடனே அவர் தம் முதுமை நீங்கி வாலிபராக மாறினார். இதைக்கண்டு திடுக்கிட்ட கௌஸுல் அஃலம் அவர்களிடம் அவர் சொன்னார்: "நான்தான் தீன் என்னும் சன்மார்க்கமாகும். நீங்கள் இந்த தீனை ஹயாத்தாக்கிய முஹிய்யத்தீன் ஆவீர்கள்" என்று கூறி மறைந்தார். இவ்வாறு கூறி மறைந்தவர் ஒரு மலக்கு ஆவார்.

இதன் பின்னர் பக்தாதின் ஒரு பள்ளிவாசலை அடைந்தார்கள். அப்பொழுது அவர்களின் முன் ஒருவர் வந்து அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்து, அவர்களின் காலடியில் ஒரு சோடி செருப்பை வைத்து, "அணிந்தருள்வீர்!" என்று வேண்டி நின்றார். அவ்வாறே அவற்றை அணிந்து கொண்டு, அவர்கள் பள்ளி சென்ற பொழுது, பள்ளியில் இருந்தோர் அனைவரும் வெளியே வந்து, "முஹ்யித்தீனே வருக! முதல்வனின் வலியே வருக! தங்களைக் கொண்டு தான் இஸ்லாம் புத்துயிர் பெற வேண்டுமென்று சற்று நேரத்திற்கு முன் பேசிக் கொண்டிருந்தோம். தாங்களும் நல்ல வேளையாக வந்து சேர்ந்தீர்கள்" என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தனர். அதன்பின் அவர்கள் தொழுது முடித்துப் பள்ளியிலிருந்து வெளி வந்த பொழுது, மக்கள் அதன் வாயிலிலே குழுமி நின்று அவர்களின் கரமெடுத்துக் கண்களில் ஒற்றி, "யா முஹியித்தீன்! யா முஹிய்யித்தீன்!" என்று கூறி மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்து நின்றார்கள்.

## காதிரியா தரீக்காவின் உருவாக்கம்

ஹிஜ்ரி 521 ஷவ்வால் 11ம் நாள் செவ்வாய்கிழமை, கௌஸுல் அஃலம் அவர்களின் கனவில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் தோன்றி, "அப்துல் காதிரே! வழிதவறி செல்லும் மக்களை ஏன் நேர்வழிக்கு அழைக்காமல் இருக்கிறீர்கள்" எனக் கேட்டார்கள். அதைக் கேட்டு திடுக்கிட்ட கௌஸு அஃலம் அவர்கள், "யா ரசூலல்லாஹ்! (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நான் அரபி இல்லையே! அஜமிதானே. எனவேதான் அரபிகளின் நகரத்தில் அரபு மொழியில் பேச தயங்குகிறேன்" என்று கூறினார்கள். இந்த பதிலைக்கேட்ட அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் சிரித்த முகத்துடன் கௌஸு நாயகத்தின் வாயை திறக்கச்சொல்லி 7 தடவை தங்களின் முபாரக்கான எச்சிலை துப்பினார்கள். அன்று முதல் கௌஸு நாயகமவர்கள் திறமையாக பேசும் ஆற்றல் பெற்றார்கள்.

என்றாலும் முதல் முறையாக பேச ஆரம்பித்தவுடன் மீண்டும் தயக்கம் வரவே, அப்போது இமாம் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தோன்றி, தங்களுடைய உமிழ்நீரை 6 தடவை உமிழ்ந்து சென்றார்கள்.

இதன் பலனாக அவர்கள் சாதுரியமாக பேசும் வல்லமை பெற்றார்கள். அதற்கு பிறகு கௌஸுல் அஃலத்தின் திருவாயிலிருந்து ஞானப்போதனைகளும், மார்க்க பயான்களும் வெளிவரத் தொடங்கியது.

கௌஸுல் அஃலம் அவர்கள் இஸ்லாத்திற்கு செய்த சேவையால் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் நேர்வழிப் பெற்றார்கள். பல்லாயிரக்கணக்கான யூதர்களும், கிறிஸ்தவர்களும் இஸ்லாத்தை தழுவினார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களின் முரீதாகி (மாணவராகி) அவ்லியாக்கள் ஆனார்கள்.

கௌஸுல் அஃலம் அவர்களின் ஒரு பயானுக்கு 70 ஆயிரம் பேர்கள் வரை கூடி பயான் கேட்டார்கள். அவர்களின் பயான் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர்களின் பயானைக் கேட்க பல ஊர்களிலிருந்தும் முஸ்லிம்கள் கூட்டம், கூட்டமாக பக்தாத்துக்கு வரத்தொடங்கினார்கள். இதனால் அவர்கள் வீற்றிருந்து சொற்பொழிவு மேற்கொண்ட பாபுல் அஸஜின் தலைமைபீடத்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டு கட்டிடம் விரிவுப்படுத்தப்பட்டது. அப்பொழுதும் இடம் போதாமையால் நகருக்கு வெளியில் உள்ள பரந்த பூமியில் பேச்சு மேடை அமைக்கப்பட்டு அதில் அமர்ந்து ஞான பேருரை வழங்கினார்கள். அவர்களின் இரவு பயான் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பகலிலேயே இடம்பிடிப்பதற்காக மக்கள் முண்டியடித்து கொண்டு வருவார்கள். சிறிது தாமதித்து வந்ததன் காரணமாக இடம் கிடைக்காதவர்கள் தாம் வந்த ஒட்டகையின் மீதோ குதிரையின் மீதோ ஏறி உட்கார்ந்து கொண்டு பயான் கேட்பர். அவர்களின் பிரசங்கத்தை ஏறக்குறைய 400 அறிஞர்களுக்கு மேல் இருந்து எழுதிக் கொண்டிருப்பார்கள். அவை பின்னர் நூல் வடிவில் ஆக்கப்பட்டன. அவைதான் புத்தூஹுல் கைப் மற்றும் பத்ஹுர் ரப்பானி ஆகிய நூல்களாகும்.

கௌஸுல் அஃலம் அவர்களின் சொற்பொழிவு கேட்போர் மனதை கவர்வதாகவும், கல்நெஞ்சையும் கரைப்பதாகவும் சொற்சுவை, பொருள் பொலிவு ஆகியவை நிறைந்ததுமாக இருந்தது. அவர்களின் பயான்களை கேட்டு பலர் அவ்விடத்திலே கூக்குரலிட்டு அழுது புரளுவார்கள். இன்னும் பலர் கானகம் நோக்கி சென்று விடுவர். இன்னும் சிலர் பயானை கேட்டு அல்லாஹ் அல்லாஹ் என்று முழக்கமிட்டவராக இறை அன்பிலே கலந்து தம்மை மறந்து தம் உயிரை நீத்தனர். எல்லா மக்களும் பயானை கேட்பது மட்டுமல்லாமல் அதை தங்கள் வாழ்க்கையில் எடுத்தும் நடந்தார்கள்.

மக்கள் தன் உள்ளங்களை பரிசுத்தப்படுத்தி நல்லவர்களாக வாழவே கௌஸு அஃலம் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் காதிரியா தரீக்காவை உருவாக்கினார்கள். திக்ருகளையும், நபில் தொழுகைகளையும் போதித்தார்கள். ஒவ்வொரு ஹாஜத்துகளையும் அடைய தன் முரீதுகளுக்கு திக்ரு முறைகளை சொல்லி கொடுத்தார்கள். அவர்கள் இவைகளை தொகுத்து கொடுத்த கிதாபிற்கு "ராத்திப்" என்று பெயர் கூறப்படுகிறது. இந்த ராத்திப்புகளையே இன்றும் காதிரி தரீக்காவை பின்பற்றுவோர் வீடுகளிலும், பள்ளிவாசல்களிலும், தக்கியாக்களிலும் ஓதி வருகிறார்கள்.



## அல்லாஹ்வின் கட்டளையை வெளிப்படுத்தல்

ஹிஜ்ரி 559 ஆம் ஆண்டில் கௌஸுல் அஃலம் அவர்களின் 89ம் வயதில் ஒரு மகத்துவமிக்க சம்பவம் நடந்தது. அல்லாஹ்வின் உத்தரவு ஒன்று அவர்களுக்கு வந்து அதை அவர்கள் மக்களுக்கு கூறினார்கள்: "எனது பாதம் எல்லா வலிமார்களின் தோளின் மேல் இருக்கிறது" என்று கூறினார்கள். இவ்வாறு அவர்கள் கூறியபோது அவர்களின் முன்னால் 'குத்பு'க்கான கொடி ஏற்றப்படுவதையும் அவர்களின் தலைமீது 'கௌது'க்கான மகுடம் சூட்டப்படுவதையும் உலகம் முழுவதிலும் இருந்த வலிமார்கள் அனைவர்களும் தமது ஆத்ம கண்களால் கண்டார்கள். எல்லோரும் ஒரே நேரத்தில் கௌஸு அஃலம் அவர்களின் பாதத்தை தங்கள் தோள் மீது ஏற்பதாக கூறினார்கள்.

இவ்வாறு கௌஸுல் அஃலம் கூறியபோது பதாஹியில் இருந்த வண்ணம் சுல்தானுல் ஆரிபீன் சையத் அஹ்மத் கபீர் ரிஃபாயி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும், குராசானில் இருந்த வண்ணம் காஜா முயினுத்தீன் சிஸ்தி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் ஞானோதயத்தின் மூலம் அறிந்து கௌஸு அஃலம் அவர்களின் பாதத்தை தங்கள் தோள் மீது ஏற்பதாக கூறினார்கள்.

## குடும்ப வாழ்க்கை

மாபெரும் தவசீலர் முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தமது வாலிப வயதில் ஆத்மீக கல்வி கற்பதிலும், தவத்திலும் ஈடுபட்டு விட்டதால் அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஆனால் ஹிஜ்ரி 521ல் நபிகள் நாயகம் (ஸலலல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் கௌஸுல் அஃலம் அவர்களின் கனவில் தோன்றி திருமணம் செய்து கொள்ளுமாறும், அதுவே உங்களுடைய ஆத்ம ஞானம் சம்பூரணமடைய அவசியமும் ஆகும் என்றார்கள். அதையொட்டி அவர்கள் திருமணம் செய்தார்கள். தமது 51ம் வயதில் நான்கு மனைவிமார்களை மணந்து 27 ஆண் குழந்தைகளையும், 22 பெண் குழந்தைகளையும் மொத்தம் 49 குழந்தைகளை பெற்றார்கள். இவர்களின் ஆண் மக்கள் சிறந்த கல்விமான்களாகவும், வலிமார்களாகவும் ஆனார்கள். அதில் சிலர் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று இஸ்லாமிய தஃவா பணியை சிறப்பாக செய்தார்கள்.

அல்லாஹ்வின் வணக்கத்தில் ஈடுபடுவதும், மக்களுக்கு அருட் பேருரைகளை வழங்குவதுமான தவநெறியில் ஈடுப்பட்டு இருந்தபோதும் ஒரு குடும்பத்தலைவர் தம் மனைவி மக்களுடன் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமோ, அவ்விதமே அவர்கள் அணுவத்தனையும் குறை வைக்காமல் நடந்து கொண்டனர். அவர்கள் தம் மனைவிமார்களுடன் அன்பொழுக உறவாடினர். தம் கண்மணி மக்களுடன் கொஞ்சிக்குலவி உரையாடினர்.

### குடும்பம்

♦ தந்தை: ஸைய்யது அபூஸாலிஹ் இப்னு மூஸா

♦ அன்னை: உம்முல் கைர் என்னும் அமத்துல் ஜப்பார்

♦ மனைவியர்:

1. மதீனா ஸாஹிபா
2. ஸாதிக்கா
3. மூமீனா
4. மஹ்பூபா

♦ பிள்ளைகள்: 49

♦ புதல்வர்கள்:

1. ஸெய்யிது ஸைபுத்தீன்
2. ஸெய்யிது ஷர்புத்தீன்
3. ஸெய்யிது ஈஸா
4. ஸெய்யிது அப்துர் ரஜ்ஜாக்
5. ஸெய்யிது அப்துல் அஜீஸ்
6. ஸெய்யிது அப்துல் வஹ்ஹாப்
7. ஸெய்யிது ஸிராஜுத்தீன்
8. ஸெய்யிது அப்துல் ஜப்பார்
9. ஸெய்யிது ஷம்சுத்தீன்
10. ஸெய்யிது தாஜுத்தீன்
11. ஸெய்யிது அப்துல் முஇஸ்ஸி
12. ஸெய்யிது இப்றாஹீம்
13. ஸெய்யிது அபுல் பஜ்ல்

தம் மனைவிமார்களுக்கு அன்றாட வீட்டு வேலைகளில் உதவி புரியவும், கடைத்தெரு சென்று வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வரவும், மனைவிமார்களில் எவரேனும் நோய்வாய்ப்படின் அவர்களின் அருகமர்ந்து, அவர்களுக்குப் பணிவிடைகள் புரியவும் செய்தனர். அப்பொழுது அவர்களே வீட்டைப் பெருக்கவும், தண்ணீர் கொணரவும், அடுக்களையில் அமர்ந்து ரொட்டி சுடவும் செய்தனர்.

அவர்களின் மனைவிமார்களும், அவர்களுக்கு இளைத்துப் போகாது, அவர்களுக்குப் போட்டியிட்டுக் கொண்டு ஊழியம் புரிந்து வந்தனர். மனைவி மக்களோடு அவர்கள் இல்லற வாழ்க்கையை இனிதே நடத்தி வந்த போதினும், உலக ஆசாபாசங்கள் அவர்களின் உள்ளத்தில் அணுவத்தனையும் இல்லாதிருந்தது.

தம் மக்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குத் தாங்களே முன் வந்து கல்வி புகட்டியதோடு மட்டுமல்லாது, பக்தாதில் அச்சமயத்தில் மாண்புற்று விளங்கிய, அறிவில் சிறந்த மேதைகளிடமும், அவர்களை அனுப்பிக் கல்வி பெறச் செய்தனர். அதன் காரணமாக அவர்களின் மக்களான ஷைகு அப்துல் வஹ்ஹாப், ஷைகு ஈஸா, ஷைகு அப்துர் ரஸ்ஸாக், ஷைகு மூஸா ஆகியோர் அறிவார்ந்த ஆன்றோர்களாகவும், சான்றோர்களாகவும் விளங்கி, நானிலத்தின் நாலா பகுதிகளுக்கும் சென்று தீன்சுடர் கொளுத்தி நின்றனர்.

## வியாபாரம்

அவர்களின் குடும்பம் பெரிய குடும்பமாகயிருந்ததால், அதன் செலவினங்களுக்காக கௌஸுல் அஃலம் அவர்கள் பெரும் வாணிபம் செய்தனர். நிர்யாணம் அடைவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்வரை வாணிபம் செய்து வந்த அவர்கள், பின்னர் அதனைத் தம் அபிமானிகளிடம் ஒப்படைத்து விட்டனர். வாணிபம் செய்து கொண்டிருக்கும் பொழுது அதில் ஒரு பற்றற்ற நிலையையே மேற்கொண்டனர்.

ஒருநாள் அவர்கள் தம் இல்லத்தில் அமர்ந்திருக்கும் பொழுது ஒருவர் வந்து அவர்களின் வியாபாரக் கப்பல்கள் புயலில் சிக்கிக் கொண்டதாகக் கூறினார். அதுகேட்ட அவர்கள், "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறினர். அடுத்த நாள் மற்றொருவர் வந்து "புயலில் சிக்கிய தங்களின் கப்பல் தப்பித்துக் கொண்டது" என்று கூறினார். அது கேட்டும் அவர்கள், "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறினர்.

### குடும்பம்

14. ஸெய்யிது முஹம்மது ஜாஹித்
15. ஸெய்யிது அபூபக்கர் ஜக்கரிய்யா
16. ஸெய்யிது அப்துர் ரஹ்மான்
17. ஸெய்யிது முஹம்மது
18. ஸெய்யிது அபுன் நஸ்ரு மூஸா
19. ஸெய்யிது ஜியாவுத்தீன்
20. ஸெய்யிது யூசுப்
21. ஸெய்யிது அப்துல் காலிக்
22. ஸெய்யிது ஸைபுர் ரஹ்மான்
23. ஸெய்யிது முஹம்மது சாலிஹ்
24. ஸெய்யிது ஹபீபுல்லாஹ்
25. ஸெய்யிது மன்சூர்
26. ஸெய்யிது அப்துல்லாஹ்
27. ஸெய்யிது யஹ்யா

♦ புதல்விகள்:

1. ஆஃபியா
2. யாசீன்
3. ஹலிமா
4. தாஜ்
5. ஸாஹிதா
6. தாஹிரா
7. உம்முல் பஸல்
8. ஷரீபா
9. ஆபிதா
10. கதீஜா
11. ரஜி
12. உம்முல்பத்ஹு
13. ஸஹ்ரா
14. ஜமால்
15. கைருன்னிசா
16. ஷாஹ்நாஸ்
17. ஷாஹ்
18. பாக்கிரா
19. பெயர் தெரியவில்லை
20. பெயர் தெரியவில்லை
21. பெயர் தெரியவில்லை
22. பெயர் தெரியவில்லை

இவ்விரு நிகழ்ச்சிகளையும் கண்டு, பெரிதும் வியப்புற்ற ஒருவர் ஆண்டகை அவர்களை நோக்கி, "தங்களின் கப்பல்கள் புயலில் தப்பிய செய்தி அறிந்து அல்ஹம்துலில்லாஹ் என்று தாங்கள் கூறியதைப் புரிந்து கொண்டேன். ஆனால் நேற்று ஒருவர் வந்து தங்களின் கப்பல்கள் புயலில் சிக்கிக் கொண்டன என்று கூறிய பொழுதும் தாங்கள், 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறியது தான் எனக்குப் புரியவில்லை!' என்று கூறிய பொழுது, "கப்பல்களை இழந்ததற்காகவோ, அவற்றை மீளப் பெற்றதற்காகவோ நான் இறைவனைப் புகழவில்லை. இழப்புச் செய்தி அறிந்து, என் மனம் சிறிதேனும் துன்புறாது இறை நாட்டத்தை இனிமையுடன் ஏற்றுக்கொண்டது கண்டு இறைவனைப் புகழ்ந்து, அவனுக்கு நன்றி செலுத்தினேன். இரு எதிர் மாறான நிலைகளிலும், இறைவனின் சித்தமே தன் சித்தம் எனக் கொள்ளும் மனநிலையை எனக்குத் தந்த இறைவனை நான் என்றென்றும் புகழ்ந்து கொண்டிருப்பேன்' என்று அவர்கள் கூறினர்.

## உருவ அமைப்பு

மாபெரும் தவசீலர் முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நடுத்தர உயரமும் பருமனும் வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தார்கள். செந்நிறத்துச் செம்மலாய் விளங்கிய அவர்கள் விரிந்த மார்பும், அகன்ற நெற்றியும், பெரிய தலையும் பெற்றிருந்தார்கள். அவர்களின் இருபுருவங்களும் சந்தித்துக் கொண்டன. அவர்களின் அழகுத் திருமுகத்தில் எப்பொழுதும், ஒரு பேரொளி இலங்கிக் கொண்டிருந்தது. அவர்களின் மூக்கிலிருந்து நீர் சிந்துவதையோ, தொண்டையிலிருந்து காறல் வருவதையோ, உடலின் மீது ஈ அமர்வதையோ, எறும்பு ஊருவதையோ எவரும் கண்டதில்லை.

## குண நலன்கள்

அறிவுத் துறையிலும், ஆத்மீகத் துறையிலும் அவர்கள் மாபெரும் பதவியை எய்தப் பெற்றிருந்த போதினும், எளிமையின் திருவுருவாக அவர்கள் விளங்கினர். தம்மினும் வயதில் சிறியவர்கள் மீது அன்பு செலுத்திய அவர்கள், தம்மினும் வயதில் பெரியவர்களுக்குப் பெரிதும் மரியாதை செலுத்தினர். அவர்களை எவரேனும் சந்திப்பின் - அவர் சிறியவராகவோ, பெரியவராகவோ இருந்தபோதினும் சரியே - முதல் 'ஸலாம்' அவர்களுடையதாகவே இருந்தது. ஏழை, எளியவர்களையும், அவர்கள் கௌரவித்தனர். அல்லாஹ்வே செல்வன், ஏனையோர் அனைவரும் ஏழைகளே என்று அவர்கள் கருதினர். அவர்கள் தம் வாணாளில் எந்த அரசருடையவோ, அமைச்சருடையவோ இல்லத்திற்குச் சென்றதும் கிடையாது. அரசர்களோ, அமைச்சர்களோ தம் இருப்பிடம் வரின், அவர்களுக்கு எழுந்து மரியாதை செய்ததும் கிடையாது.

### குதுபு நாயகம் பற்றிய அல்லாமா இக்பாலின் அருமையான கவிதை

நம்மிடையே பாங்கின் சடங்கு இருக்கிறது! அதில் ஹஸ்ரத் பிலால் (ரலியல்லாஹு அன்ஹு) வின் ரூஹ் இல்லை.

ஏடுகளும், கல்விகளும் நிறைய இருக்கின்றன! கஸ்ஸாலி இமாமின் உள்ளுணர்வு இல்லை!

மேடைகள் நிறையப் போடப்படுகின்றன! எனினும் இந்த சமுதாயப் பேச்சாளர்களிடம் இறைக் காதல் எனும் நெருப்பு இல்லையே! சொற்களில் மின்னல் இல்லையே! வார்த்தை எனும் ஜுவாலைகள் கேட்பவர்களை எரிக்கவில்லையே!

பக்தாது வீதிகளில் குதுபு நாயகம் இதே குர்ஆன் ஹதீஸைத் தானே கூறினார்கள்! கேட்ட மக்களெல்லாம் தரையில் புரண்டு அழுதார்கள்! சட்டையை கிழித்துக் கொண்டவர்கள் எத்தனை பேர்! அல்லாஹ்! அல்லாஹ்! என்று அங்கேயே உயிரை விட்டவர்கள் எத்தனை பேர்! பைத்தியம் பிடித்துக் காட்டுக்குச் சென்றவர்கள் எத்தனை பேர்!

ஆம்! அன்று இறைவனுக்காகப் பேசினார்கள்! இன்று இரைக்காகப் பேசுகிறார்கள்!”

## மறைவு

மாபெரும் தவசீலர் முஹிய்யதீன் அப்துல் காதர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் பூத உடலைவிட்டு மறையும் நேரம் வந்தது. அதை லௌஹுல் மஹ்பூல் என்னும் ஏட்டில் அவர்களால் பார்க்க முடிந்தது.



ஷேய்க் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் புனித அடக்கஸ்தலம் - பக்தாத், ஈராக்

கௌஸுல் அஃலம் அவர்கள் தனது இறுதி நேரத்தை அடைந்தபொழுது மலக்குமார்களும், அவ்லியாக்களின் ரூஹுகளும் அவர்களை பார்க்க வந்துக்கொண்டிருந்தன. ஒவ்வொருவருக்கும் ஸலாம் கூறிக்கொண்டே இருந்தார்கள். பிறகு கௌஸுல் அஃலம் அவர்கள் குளித்துவிட்டு இஷா தொழுகையை தொழுதார்கள். நீண்டநேரம் ஸுஜூதில் இருந்து தன் குடும்பத்தார்களுக்கும், சொந்தக்காரர்களுக்கும் தன் முரீதுகளுக்கும், முஸ்லிம்களுக்கும் துஆ கேட்டார்கள். ஸுஜூதிலிருந்து அவர்கள் தலையை உயர்த்தியதும்" சாந்தியடைந்த ஆத்மாவே! உன் அல்லாஹ்வின் பக்கம் திரும்பி வருவாயாக. என் சுவர்க்கத்தில் புகுந்து கொள்வாயாக" என்ற திருக்குர்ஆன் வசனம் அசரீரியாக கேட்டது. கடைசி நேரம் வந்துவிட்டதை உணர்ந்த கௌஸுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தன் வாயால் திருக்கலிமாவை கூறி மூன்று தடவை “அல்லாஹ் அல்லாஹ் அல்லாஹ்” என்று அழைத்தார்கள். அதோடு தன் 91வது வயதில் ஹிஜ்ரி 561 ரபியுல் ஆகிர் பிறை 11 (கி.பி. 1166 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை) அன்று இந்த உலகை விட்டு மறைந்தார்கள்.

## மவ்லித் - உரூஸ் - கந்தூரி

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள்:

நபிமார்களை நினைவு கூர்வது வணக்கமாகும். ஸாலிஹீன்களை (அவ்லியாக்களை) நினைவு கூர்வது பாவப்பரிகாரமாகும்.

(நூல் - அல் ஜாமிவுஸ்ஸகீர்)



ஷேய்க் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் உரூஸ் தின ஒன்று கூடல் - பக்தாத், ஈராக் - 2018

கௌஸுல் அஃலம் அவர்கள் பிறந்த தினம் ரமழான் பிறை 1 ஆகும். அத்தினத்தில் அவர்களை நினைவு கூர்ந்து பாத்திஹா மற்றும் மவ்லித் மஜ்லிஸ்கள் உலகெங்கும் நடத்தப்படுகின்றன.

அதேபோன்று அவர்களின் நினைவு தினமான ரபியுல் ஆகிர் பிறை 11 இல் உலகின் பல பாகங்களிலும் அவர்களை நினைவு கூர்ந்து மவ்லித் மஜ்லிஸ்கள், உரூஸ் (கந்தூரி) வைபவங்கள் நடாத்தப்படுகின்றன.

இவ்வாறு அல்லாஹ்வின் நேசரை நினைவு கூர்வதன் மூலம் பாவ மன்னிப்பும், அல்லாஹ்வின் நேசமும், அருளும் எமக்கு கிடைக்கப் பெறுகிறது..

## ஷேய்க் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் உபதேசங்கள்

- நீ விரும்புவது அது உனக்கு கிடைப்பதற்குரியதாயின். நீ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அது உன்னை வந்தடையும்.

- பொறுமையை கடைப்பிடியுங்கள். ஏனெனில், இவ்வுலகமானது ஆபத்துகளும், துன்பங்களும் நிறைந்த ஸ்தலமாகும். சுகம் இருந்தால் அதனுடன் கஷ்டமும், இன்பம் இருந்தால் அதனுடன் துன்பமும், வசதி இருந்தால் அதனுடன் நெருக்கடியும் இருப்பது இவ்வுலக வாழ்வின் இயல்பாகி விட்டது.

- நிச்சயமாக அல்லாஹ் தன் அன்பர்களுக்கு வேதனை கொடுப்பதில்லை. ஆனால் சோதனை செய்வான். என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் அருளியுள்ளார்கள். முஃமீன்கள், அவன் சோதனையில் ஸ்திரமாய் இருந்து வருவார்கள். அல்லாஹ் எவ்விதம் சோதித்தாலும் அச்சோதனையின் சிரமத்துக்கு பிறகு வரவேண்டிய நன்மைக்காகவே அவ்விதம் சோதித்து அருள்வான். ஆகையால் அவர்கள் சோதனையில் உண்டாகும் கஷ்டங்களிடையே திருப்தியும், மனப்பொறுமையும் வாய்ந்தவர்களாகவே இருந்து வருவார்கள்.

- ஒரு வழிகாட்டி இல்லாதவனுக்கு கண்டிப்பாக ஷைத்தானே வழிகாட்டியாக அமைவான்” என்று ஒரு ஞானி கூறியுள்ளார். அல்குர்ஆன், ஹதீஸின் படி நடக்கும் பெரியார்களின் அடிச்சுவட்டை (வழியை) பின்பற்றி நடந்து நல்லெண்ணத்துடன் அவர்களின் போதனைகளை கேட்டு மனத்தெளிவு பெறுங்கள். அதுவே உங்களை வெற்றியின் பாதையில் அழைத்துச் செல்லும்.

- நீ வறுமையில் கஷ்டப்படுகையில், உனக்கு திருமணம் செய்து கொள்ளும் ஆசை உண்டாகிறது. ஆனால் உனக்கு அதற்கான வசதி இல்லை. எனவே, அந்த ஆசையை உன்னுள் உண்டாக்கிய சக்திக்கு உரியவனான அல்லாஹ்விடமிருந்து உதவியை எதிர்பார்த்தவனாக பொறுமையுடன் காத்திரு. அப்போது அதற்கான வாய்ப்பையும் வருவாயையும் நட்கொடையாக தந்து, போதுமான அளவுக்கு உனக்கு உணவு முதலியன கிடைக்க உதவி செய்து, இம்மையிலும், மறுமையிலும் அந்தப் பாரத்தை நீ எளிதாக சுமக்கும் படி செய்வதன் மூலம் அவனே உனக்கு உதவுவான். அதுவரை நீ கொண்டிருந்த பொறுமைக்காகவும், அவன் நல்லருளில் திருப்தி காட்டியதற்காகவும், அல்லாஹ், அவனை "பொறுமையாளன்" "நன்றி விசுவாசம் உடையவன்" என்று அழைப்பான். அதனால் அவன் உன் பரிசுத்தத்தையும், சக்தியையும் அதிகரிப்பான்.

- சோதனையில் இருந்து வெருண்டோடாதீர்கள். பொறுமையைக் கொண்டு ஏற்கப்படும் சோதனையே சர்வ நன்மைகளினதும் அஸ்திவாரமாகும். நபித்துவத்தினதும், தெய்வ தோழமையினதும் (விலாயத்) தெய்வ ஞானத்தினதும் (மஃரிபத்) தெய்வ அன்பினதும் அஸ்திவாரமாய் இருப்பது சோதனையேயாகும். ஆகவே சோதனயில் பொறுமை இல்லாது போகும்போது அஸ்திவாரமே இல்லாத நிலையாகிவிடுகிறது.

- துயரம் உன்னை நசுக்குவதற்காக வருவதல்ல. உன்னை சோதித்து, உன் ஈமானின் உறுதியை ஊர்ஜிதம் செய்து, உன் நம்பிக்கைகளின் அடிப்படையை உறுதியாக்கி, உன்னைப் பற்றி உன் இறைவன் கொண்டுள்ள அன்பான எண்ணங்கள் பற்றிய நற் செய்தியை உன் அந்தரங்கத்தில் புகுத்துவதற்காகவே அது வருகிறது என்பதை நீ உணர்ந்துக்கொள். “மிக மிக நிச்சயமாக உங்களில் தம்மை மிகவும் கடுமையான முயற்சியில் ஈடுபடுத்துபவர்களையும், சகிப்புத் தன்மை உடையவர்களையும் அறிந்து அதை வெளிப்படுத்தும் வரை சோதிப்போம்” (47: 31) என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

- ஞானம் நூல்களில் இல்லை. பூரணத்துவம் பெற்ற ஞானிகளின் வாயில் இருக்கிறது.

## ஷேய்க் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் உபதேசங்கள்

- நீ பொறுமையை கைக்கொள்! அவன் விதித்த விதியை திருப்தியோடு ஏற்றுக்கொள்! உனக்கு தெரியாது உன் விதியை மாற்றி வேறு விதமாக எழுதவும் அவனால் முடியும். உன் பொறுமையை கண்டு திருப்தியுற்று சோதனையை இல்லாமலும் செய்துவிடுவான். பிறகு உன் நிலையைக் கண்டு நீயே மகிழ்வாய், நீ வெருண்டு, திடுக்கிட்டு ஆத்திரப்பட்டாயோ நிச்சயம் உன் சுமையை கனமானதாக்கி விடுவான். உன் ஆட்சேபனை உன் தண்டனையை அதிகரித்தான் உதவும்.

- பணத்தின் மீதுள்ள மோகத்தால் பணக்காரர்களுக்கு பயந்து அடிபணிபவனின் மார்க்கப் பற்றில் மூன்றில் இரண்டு பங்கு பறிபோய் விட்டது." என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறியதாக ரிவாயத்து செய்யப்பட்டுள்ளது. உள்ளொன்றும், புறமொன்றுமாயிருக்கும் முனாபிக்குகளே, கவனித்துக் கேளுங்கள். பணக்காரர்களுக்கு பயந்து அடிபணிபவன் கதியே இதுவென்றால் பணக்காரர்களின் தயவை பெறுவதற்கென்றே தொழுது கொண்டும், நோன்பு பிடித்துக்கொண்டும். ஹஜ்ஜு செய்துக்கொண்டும், பணக்காரர்களின் வீட்டு வாசல்படிகளை முத்தமிட்டுக் கொண்டும் இருப்பவனுடைய கதி என்ன?

- அல்லாஹ்வின் நாட்டத்துக்கு இணங்கியவர்களாகி விடும் வழி தேடுங்கள். நடக்கப் போவது உங்களின் நாட்டம் அல்ல. அவனுடைய நாட்டமேயாகும். அவனது நாட்டம் நடைபெறுவதற்கு எதிராக உங்களின் நாட்டம் என்ன செய்ய முடியும்? அவனது நாட்டம் நடைபெறுவதில் குறுக்கிடும் ஆத்மாக்கள் அழிவுக்குள் ஆகும் என்பதில் சந்தேகம் உண்டா? 'அவனது நாட்டம் நடைபெறட்டும்' என்றவர்களாக தக்தீருக்கு (விதிக்கு) அடிப்பணிந்தவர்களாகி விடுங்கள்.

- மனித கோடிகளுக்கு சேவை செய்து அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பவனே அல்லாஹ்வின் உண்மையான அடியான் ஆவான். அவ்வாறு பணியாற்றும் அந்த உண்மை சேவகன் இறைவனின் சகல நல் அருட்பேறுகளையும் கொள்ளையடித்துக் கொண்டு, ஏழைகள் அனாதைகள், கடனில் மூழ்கிக் கஷ்டப்படுவோர் ஆகியோரை ஆதரித்து கைத்தூக்கி விடுகிறான். அவனே இறைவனால் மன்னாதி மன்னனாக மதிக்கப்படுகிறான்.

- உன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்தெழு. விழிப்புணர்ச்சி என்ற நீரை கொண்டு உன் முகத்தை கழுவு. நீ எந்த நிலையிலிருக்கிறாய்? முஸ்லிமாகவா? காபிராகவா? முஃமினாகவா? முனாபிகாகவா? ஏகத்துவவாதியாகவா? இணைவைப்பவனாகவா? முகஸ்துதி பிரியனாகவா? உள்ளம் தூய்மையுடையவனாகவா? நேர்பட்டு நடப்பவனாகவா? மாறுபட்டு நடப்பவனாகவா? பொருத்தம் உடையவனாகவா? வெறுப்பு உடையவனாகவா? கண்ணைத் திறந்து கவனித்துப்பார். உன் நிலை எதுவாயினும் உன் செயல் எதுவாயினும் அதன் லாப நஷ்டம் உனக்கு தான் அன்றி அல்லாஹ்வுக்கு அல்ல என்பதை உணர்ந்துக்கொள்.

- பொறுமையை கைக்கொள், மனப்பூர்வமாக அடிபணிய பழகிக்கொள். அமைதியாய் இரு, மௌனமாய் இரு எச்சரிக்கை! தப்பித்துக்கொள்வதில் எச்சரிக்கை! சீக்கிரம்! அல்லாஹ்வுக்கு அஞ்சு! மீண்டும் அல்லாஹ்வுக்கு அஞ்சு! உன் பார்வையை கீழ் நோக்கி செய்! உன் கண்களை திருப்பு! நாணத்துடன் நடந்துக்கொள்! விதிவசம் தனக்குரிய நேரத்தை அடையும் வரை, உன் கையை பிடித்து உன்னை முன்னணிக்கு இழுத்துக் கொண்டு வரும்வரை இந்த நிலையிலேயே இரு. அதன்பின் நீ பாரமாக கருதியவை யாவும் உன்னை விட்டு அகற்றப்படும். அருள்மாரி, கருணை, பரிவு என்ற கடலிலே நீ மூழ்கடிக்கப்படுவாய். மெஞ் ஞானத்தாலும் தெய்வ ரகசியங்களாலும், ஒளியாலும் நீ சூழப்பட்டவனாய் அப்போது நீ அருகில் உள்ளவனாகவும், நன்கொடைகள் பெறுபவனாகவும், தேவைகள் அற்றவனாகவும், உறுதியும் உயர்ந்த பதவியும் பெற்றவனாகவும் ஆகிவிடுவாய்.

- நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் சமூகத்தில் ஒருவர் வந்து "யா ரசூலல்லாஹ்! நான் உங்களை மிகவும் நேசிக்கின்றேன்"என்று கூறினார். அதற்கு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள்:

  "அப்படியாயின் பெரும் சோதனையையும், வறுமையையும் தாங்கிக்கொள்ள தயாராக இரு. என்னை நேசிப்பதாக கூறும் நீர், என் குணலட்சணங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறாயின் எனது அன்பிற்குரியவராவீர்".என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள்.

  இவ்வாறேதான் அபூபக்கர் ஸித்தீக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுடைய நேசம் இருந்தது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுடைய நட்பைப் பெற்றதும் அவர்கள் அந்த அருமை நாயகத்திற்காக தனது பொருட்களையெல்லாம் வாரி வழங்கினார்கள். அவ்வாறு வழங்கி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் போன்ற குணம் பெற்று அன்னவர்களைப்போன்று வறுமையில் பங்கெடுத்தார்கள். பெரும் சீமானாக வாழ்ந்த அவர்கள் கம்பளி ஆடை அணிந்துக்கொள்ளும் அளவுக்கு எளிமையை மகிழ்வுடன் ஏற்று ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுடைய நேசத்தையே உள்ளும், புறமும், அந்தரங்கத்திலும், பகிரங்கத்திலும் எடுத்து நடந்தார்கள்.

  "பள்ளத்தை நோக்கி பாய்ந்தோடிச் செல்லும் தண்ணீரை விட அதிவேகமாக என்னை நேசிக்கும் மனிதனுக்கு வறுமை விரைந்தோடிச் செல்லக்கூடியது" என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறியிருப்பது இக்காரணத்திற்காகவே.

  இவற்றைக்கொண்டு நாம் உணர்ந்து கொள்வது யாதெனில், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் நேசத்துக்கு நிபந்தனை வறுமை என்பதுவும், அல்லாஹ்வின் நேசத்துக்கு நிபந்தனை சோதனை என்பதுவுமே. எல்லா விதமான சோதனைகளும் நேசர்களுக்கே வந்து சேரும், காரணம் அவர்கள் அல்லாஹ்விடம் கொண்டுள்ள நேசத்தில் பொய், உள்ளொன்று புறமொன்றான சுபாவம், முகஸ்துதி, முதலியன இல்லாமல் உள்ளம் சுத்தமுள்ளவர்களாக இருக்கிறார்களா என்று என்று பரீட்சிக்கப்படுவார்கள் என்று பெரியார்களில் ஒருவர் கூறியுள்ளார்கள்.

- எந்தப் பாக்கியத்தையும் நீயாக கைப்பற்றி கொள்ளவோ, எந்தத்துயரையும் ஒதுக்கிக் கொள்ளவோ எந்த முயற்சியும் செய்ய வேண்டாம். பாக்கியம் உனக்கு விதியில் இருந்தால், நீ அதை தேடினாலும், தேடாவிட்டாலும் அது உன்னை வந்தடையும். நீ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் துயரம் விதிக்கப்பட்டிருப்பின், அதுவும் உன்னை வந்தடையவே செய்யும் உன் தொழுகை மூலமோ உன் சகிப்புத்தன்மை, பொறுமை ஆகியவற்றாலோ அதை ஏற்று உன் இறைவனின் அருளைப்பேறு.

- உங்கள் உணவையும், உடையையும், உள்ளத்தையும் தூய்மையாக்கி வைத்தீர்களேயானால் தூயவர் (ஸூபி) ஆகிவிடுவீர்கள். ஸூபி என்ற சொல் 'தஸவ்வுப்' என்றதிலிருந்து வந்தது. தஸவ்வுப் என்ற சொல் 'ஸா' என்றிலிருந்து மூலத்திலிருந்து உண்டாயிற்று. 'ஸபா' என்பதற்கு பொருள் "தூய்மை" என்பதாகும். ஸூப் என்ற கம்பளி உடை அணிந்தோர்களே. உண்மையான ஸூபி யாரென புரிந்துக்கொள்ளுங்கள்.

- அன்பர்களே, எனது ஞான உபதேசத்தை ஏற்று புனிதப்படுங்கள்! என் மீது குறை கூறாதீர்கள்! என்னைப்பற்றி புறம் பேசாதீர்கள்! நானோ உங்களை பரிவோடு நோக்குகிறேன். உங்கள் சுமையை ஏற்கிறேன். உங்கள் மெய் வணக்கங்களை ஏற்கவும், பாவங்களை மன்னிக்கவும் அல்லாஹ்விடம் எந்நேரமும் பிரார்த்திக்கிறேன். என்னை மெய்யாக அறிந்து கொண்டவர்கள்தான் மரணம் வரை என்னை விட்டு அகலாமல் என்னை உணவாகவும், பானமாகவும், உடையாகவும், பேரின்ப பேராகவும், முன்மாதிரியாகவும் ஏற்பார்கள்.